# புதுச்சேரி அரசு
# காவல்துறை

No.59/SP(RC)/OW/2022

Date: 10.02.2022.

## பத்திரிகை செய்தி

******

புதுச்சேரி காவல் துறையின் 20.08.2018 தேதியிட்ட அறிவிப்பின்படி காலியாக உள்ள 12 ரேடியோ டெக்னீசியன் (Radio Technician) பணியிடங்களை நேரடி ஆட்சேர்ப்பின் மூலம் நிரப்ப ஆவண செய்யப்பட்டது. இதற்காக 11.02.2022 அன்று நடத்த திட்டமிடப்பட்டிருந்த உடற்தகுதித் தேர்வில் (PST) கலந்துகொள்ள தகுதியான விண்ணப்பதாரர்கள் தங்களின் அனுமதி சீட்டை பதிவிறக்கம் செய்வதற்காக அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வழிவகை செய்யப்பட்டது.

எனினும், இந்த உடற்தகுதித் தேர்வானது (PST) நிர்வாகக்காரணங்களுக்காக ஒத்திவைக்கப்படுகிறது. இது சம்பந்தமான விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இதன் காரணமாக ஏற்பட்ட சிரமங்களுக்கு வருந்துகிறோம்.

(சி. குபேரசிவகுமரன்)
சிறப்பு அதிகாரி
காவல்துறை, புதுச்சேரி